(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 7(4).]**

# பாராளுமன்றம்

## 7ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 நவெம்பர் 16 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா.169/ '12

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,— 2012 நவெம்பர் 09ஆம் திகதி இடம்பெற்ற சிறைச்சாலைக் கலவரம் தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

பாரதூரமான சிறைச்சாலைக் கலவரமொன்று 2012 நவெம்பர் 09ஆம் திகதி இரவு ஆரம்பித்து 2012 நவெம்பர் 10ஆம் திகதி அதிகாலை வேளை வரை இடம்பெற்றுள்ளதாலும், இக்கலவரத்தினால் ஏறத்தாள 30 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாலும், விசேட அதிரடிப் படைத் தலைவரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட அதேயளவிலானோர் காயமடைந்திருப்பதனாலும்,

எமது சிறைச்சாலைகளில் இத்தகைய நிகழ்வுகள் நடைபெற்றிருப்பது இது முதற்தடவையல்ல என்பதனாலும்,

சிறைச்சாலை முறைமையில் ஏற்பட்ட ஊழல் காரணமாகவே இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது போல் தென்படுவதனாலும்,

(அ) தற்போதைய கலவரங்களுக்குரிய உடனடிக் காரணமாக அமைந்தது எது என்பதையும்;

(ஆ) சிறைச்சாலைக் கலவரங்கள் அடிக்கடி எதனால் தூண்டப்படுகின்றன என்பதையும்;

(இ) சிறைச்சாலை ஒழுக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற தீர்க்கப்படாமல் நீண்டகாலமாகவுள்ள பிரச்சினைகள் யாவை என்பதையும்;

(ஈ) இத்தகைய நிகழ்வுகளைத் தடுப்பதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(உ) இதனுடன் தொடர்பானவை எனக் குழு கருதும் ஏற்புடைய வேறு ஏதாவது விடயங்களையும்

ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன்,

(ஆ) நிலையியல் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தெரிகுழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவுகளை அழைப்பிப்பதற்கும் பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறு எவரேனும் ஆட்களை ஆணையிட்டழைக்கவும் அத்தகைய ஆட்களிடமுள்ள அல்லது அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடவும்;

(இ) சாட்சியங்களை வாய்மூல விசாரணை மூலம் மெய்ப்பிப்பதற்கும் அல்லது வேறு விதமாக உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் குழுவின் தவிசாளர் அல்லது விசேடமாக அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளின் மேற்பார்வையின் கீழ் சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப் பிரமாணத்தின் மீதமைவாக சாட்சிகளை விசாரிக்கவும்;

(ஈ) குழுவிற்கு உதவி வழங்குவதற்காக ஏற்புடைய துறைகளைச் சேர்ந்த துறைசார் வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும், தொடர்ந்தும் அமர்வுகளை நடாத்திச் செல்வதற்குமான

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் அறிக்கையை அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கக் கூடியவாறான அத்தகைய வேறு அல்லது மேலதிக காலத்தினுள் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.